**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>**

**<u>அசல் வழக்கு எண்</u>**.254/2015

பெயர்-திரு.ரங்கராஜ் நாள்.15.09.2025

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : 1, 3, 4, 6 பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

1) எனது ஊரும், வாதிகளின் ஊரும் சிக்கரசம்பாளையம் என்றால், சரிதான். எனது வீடு வாதியின் வீட்டிலிருந்து 10 வீடு தள்ளி உள்ளது. 1-ம் வாதி சுப்பமாளின் கணவரும், எனது தாத்தாவும் உறவினர்கள் என்றால், சரிதான். சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தீர்கள் என்றால், 2-ம் வாதி ரேவதி சொல்லி வந்தேன். இன்றைக்கு நானும், மூர்த்தியும் நீதிமன்றத்திற்கு வந்தோம். மூர்த்தி ரேவதியின் மகன் ஆவார். நானும், மூர்த்தியும் நெருங்கிய உறவினர்கள் என்றால், சரிதான். என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தை, நீதிமன்றத்திற்கு நான் வரும்போது தயார் செய்து வைத்திருந்தார்கள். யார் தயார் செய்தது என்று எனக்கு தெரியாது. அதிலுள்ள சங்கதிகள் யார் சொல்லி தயாரிக்கப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. சுப்பம்மாள் என்ன உறவுமுறையில், என்ன உரிமையில் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால், தெரியாது.

2) எதனால், இவ்வழக்கு ஏற்பட்டது என்ற விவரமும் எனக்கு தெரியாது என்றால், ஆமாம் தெரியாது. தாவா சொத்து எங்கு உள்ளது, எவ்வளவு அளவுகள் உள்ளது என்றால், மொத்தம் மூன்று இடத்தில் சொத்துக்கள், அதன் மொத்த அளவு 7 1/2 ஏக்கர். 1980-ல் நான் சிக்கரசம்பாளையத்தில் குடியிருந்தேன். தற்போது 52 வயதாகிறது. 1980-ல் எனக்கு 7 வயது என்றால், சரிதான். 1980-ல் வழக்கு சொத்தைப் பொறுத்து என்ன நடந்தது என்ற விவரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது. மூர்த்தி சொன்னதன் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால், சரியல்ல. மூர்த்தியின் அம்மா ரேவதி எனக்கு உறவினர். எதனால், வழக்கு ஏற்பட்டது என்ற விவரமும், எதனால் வாதிகளுக்கு பாகம் கொடுக்க மறுத்தார்கள் என்ற விவரமும் நேரடியாக எனக்கு தெரியாது.

மறு விசாரணை இல்லை.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2025.09.15 18:14:52 +0530

District Munsif